# ஆயர் மடல்.....

அன்புக்குரியவர்களே,

**மே தின வாழ்த்துக்கள் ! HAPPY LABOUR DAY.**

நாம் அனைவருமே இயேசுவுடன் தொழிலாளர்கள் என்பதை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன். தேவன் இந்த உலகத்தை படைத்து நமது கைகளில் கொடுத் திருக்கிறார். இந்த உலகத்தை மேலும் மேலும் சீர்படுத்த வும், பிறர் மகிழ்ச்சியோடு வாழ ஒரு நல்ல உலகமாக உருவாக்கும் பணியில் இயேசுவுடன் இணைந்து, இசைந்து பணியாற்ற நம்மை தேவனுக்கு ஒப்புக் கொடுப்போம். தேவன் நமக்கு கொடுத்த பொறுப்புக்களை நாம் கடுமையாக உழைத்து, உண்மையாக உழைத்து, தேவனுக்காகவே நான் வேலை செய்கிறேன் என்ற உணர்வோடு செயல் படும்பொழுது. நம் மூலமாக இந்த உலகத்தில் பிறருடைய வாழ்வில் முன்னேற்றமும், விடுதலையும், மனமகிழ்ச்சியும், தேவ நாமத்திற்கு மகிமையும்உண்டாகும்.

இந்த மாதத்தில் நான் விடுமுறையில் உள்ளதால் உங்களுடைய அவசர தேவைகளுக்கு நமது VICE CHAIRMAN, SECRETARY இவர்களை சந்திக்கவும். இந்த மாதத்தில் நமக்கு CSI TAMIL CHURCH , ABUDHABI போதகர் REV. JAMES PAUL RAJ ஆராதனையை நடத்திக் கொடுப்பார்.

ஆதலால் நீங்கள் யாவரும் வெள்ளி ஆராதனைக்கு முறையாக கலந்து கொள்ள அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran

## *Meditation* (தியானம்)

அன்பிற்குரியவர்களே,

மே தின வாழ்த்துக்கள்.

தேவன் இந்த உலகத்தை பண்படுத்த நம்மைஅழைக்கிறார்:

தேவன் இந்த உலகத்தை ஆண்டுகொள்ளுங்கள் என்று ஏன் சொன்னார் ? ஆண்டு கொள்ளுங்கள் என்றால்! இதை கண்டபடி சுய லாபத்திற்கு சுரண்டி அழிக்கவேண்டும் என்று நமது கரங்களில் கொடுக்க வில்லை. நம்மால் இந்த உலகத்தை பண்படுத்த முடியும் என்று சொல்லித்தான் நமது கரங்களில் இந்த உலகத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். இந்த உலகத்தை பயன்படுத்தக் கூடாது என்று கர்த்தர் சொல்ல வில்லை. முதலில் கடுமையாக உழைத்து இந்த உலகத்தை பண்படுத்து, பின்னர் பயன் படுத்து. நாம் உழைக்க முடியாத படி தடைசெய்வது யார்? என்றால் சாத்தான் அல்ல, நம்முடைய சோம்பேறித்தனம். நீதிமொழிகள் 6:6-8 சோம்பேறியே எறும்பினிடத்தில் போய் சுறுசுறுப்பையும், கடின உழைப்பையும், தியாகத்தையும், பொறுப்புணர்

வையும் கற்றுக்கொள். O SLUGGARD WHEN WILL YOU ARISE FROM YOUR SLEEP AND FROM YOUR LAZINESS, IF YOU DONT ARISE FROM YOUR SLEEP YOUR POVERTY WILL COME TO YOUR HOUSE .POVERTY மாத்திரமல்ல, கொசுவைப்போல இரத்தத்தை குடிக்கும், அழையா விருந்தாளியாக வந்து, நமது இச்சைகளை, ஆசைகளை தூண்டி பாவ அடிமைத்தனத்தில் நம்மை வீழ்த்தி விடும். நாம் ஜாக்கிரைதையாக இல்லா விட்டால் இந்த பாவஞ் செய்ய தூண்டும் கொசுக்கள் நம்மை சுற்றி மொய்த்துக் கொன்டே இருக்கும். ஆதலால் நாம் எப்பொழுதும் கர்த்த ருக்குள் சுறுசுறுப்பாகவே இருக்க வேண்டும் அப்பொழுது தான் நாம் எப்பொழுதும் கர்த்தருக்குள் சந்தோசமாக இருக்க முடியும். நம்முடைய அயராத உழைப்பினால் இந்த உலகத்தையும் பண்படுத்தி தேவ நாம மகிமைக் கென்று பயன் படுத்த முடியும். தேவன் நம்மை இந்த உலகத்தை ஒருபடி உயர்த்த, மேம்படுத்த அழைத்திருக் கிறார்:

மரணபயத்திலும், பாவ அடிமைத்தனத்திலும் சிறை பட்டுக்கிடந்த இந்த மனுக்குலத்தை விடுவித்து, மறுபடியும் நமக்கு இழந்த தேவசாயலை கொடுத்து, பரிசுத்தவான் களாக, நீதிமான்களாக நம்மை உயர்த்தி, மேம்படுத்தி இந்த உலகத்தில் வைத்திருக்கிறார். ஆதலால் இலவசமாக உயர்வை, மேன்மையை பெற்ற நாமும் தேவனோடு இணைந்து, இசைந்து கடுமையாக உழைக்க, உழைக்க தான் நம் மூலமாக இந்த உலகம் உயர்வு பெறும். ஆதலால் திராட்சைசெடியான இயேசுவோடு நெருங்கிய ஜெப ஐக்கியம், தொடர்ந்து இடைவிடாமல் கொடியாக திராட்சை செடியாகிய இயேசுவில் நிலைத் திருப்போம். மிகுதியான கனிகளை கொடுப்போம். நாம் எதை செய்தா

லும் ஏசுவுக்கென்று செய்து இந்த உலகம் நம்மால் ஒருபடி உயர பாடுபடுவோம்.

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**
Rev. Christopher Rajendran.

## *செயலரிடமிருந்து…….*

**கி**றிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் கிருபையாய் நம்மை காத்து வழி நடத்தி இந்த புதிய மாதத்தை காணச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஆராதனையும் நமக்கு ஆசீர்வாதமாக அமைய தேவன் கிருபை செய்தார். குறிப்பாக கடந்த மாதம் நடைபெற்ற உயிர்த்தெழுதல் தின ஆராதனை மற்றம் விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS) இறுதி நாள் நிகழ்வுகள் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது என்று நம்புகிறேன்.

அது போல் நாம் நடத்த திட்டமிட்டிருக்கும் வருடாந்திர பொதுக்குழுக் கூடுகைக்காக, அந்நாளிலே புதிதாய் தேர்ந் தெடுக்கப்படவிருக்கும் செயற்குழுவிற்காக ஜெபிப்போம்.

நமது போதகர் அவர்களின் விடுமறை நாட்களுக்காக, அந்நாட்களில் அவர்கள் நடத்த திட்டமிட்டிருக்கும் ஒவ்வொரு காரியங்களையும் தேவன் நன்மையாய் நிறைவேற்றித் தர ஜெபிப்போம். அது போல நமக்கு அந்நாட்களின் ஆராதனைகளை நடத்தி தர இசைந்நிருக்கும் அபுதாபி போதகர் அவர்களையும் நம் அனுதின ஜெபங்களிலே நினைவு கூருவோம்.

மேலும், தொடர்ந்து வரும் நாட்களின் எல்லா ஊழியங்களிம் இணைந்து செயல்படுவோம். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் அப்பேர்பட்ட வாய்பினை அருள்வாராக.

*M. நேசமணி.*

***********************

## பெண்கள் ஐக்கியச் சங்கம்

*அன்புக்குரிய தாய்மார்களே,*

தொழிலாளர் தின வாழ்த்துக்கள்.

பெண்கள் இந்த நாட்களில் எல்லா துறையிலும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். வீட்டிலும் வேலை, வீட்டிற்கு வெளியிலும் குணசாலியான பெண்ணைப் போல எறும்பைப் போல நாம் நம்முடைய குடும்பத்துக்காக எத்த னையோ தியாகங்களை செய்து உழைத்து வருகிறோம். நம்முடைய தியாகமான உழைப்பு நமது குடும்பங்களில் பாராட்டப்படுவதில்லை. ஆனால் அதைப் பற்றி கவலைப் படாமல் மாடாக உழைத்து, உழைத்து தேவனுக்காக உழைப்போம். தேவனை நாம் இவ்விதமாக கனப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.இதை அறிந்தோ அறியாமலோ நாம் தேவனுக்காக செய்து கொண்டிருக்கிறோம். ஆண்களுக்கு பாலை குடிக்கத்தான் தெரியும் அனால் பெண்களாகிய நமக்கு அதை தயிராக்க தெரியும், மோராக்க தெரியும், பின்னர் வெண்ணையாக்க தெரியும், நெய்யாக்க தெரியும், பால்கோவாக்க தெரியும். இதிலிருந்து என்ன தெரிகிறது? பெண்கள் நல்ல உழைப்பாளிகள் .

உங்கள் ஆயரம்மா.

Angel.C.

## Points to Ponder Upon

Jesus death on the cross didn't just accomplish your forgiveness.

It purchased your FREEDOM.

The lazy Christian has his mouth full of complains…

The active Christian has his mouth full of praise.

**WHICH ONE ARE YOU?**

We cannot be disobedient to God and then think we can resist the devil and be the children of God.

A WRATH-LESS God does not make him more attractive.

**IT MAKES HIM MORALLY INDIFFERENT**

If you are not praying in your daily life, you are missing one of Gods greatest gift to his children, a chance to talk.

If we neglect to enter communion with the holy spirt we deny ourselves the opportunity to know the son.

**PRAYER**

Psalms 119: 33-40

33 Teach me, Lord, the way of your decrees,
that I may follow it to the end.
34 Give me understanding, so that I may keep your law

and obey it with all my heart.
35 Direct me in the path of your commands,
for there I find delight.
36 Turn my heart toward your statutes
and not toward selfish gain.
37 Turn my eyes away from worthless things;
preserve my life according to your word.
38 Fulfil your promise to your servant,
so that you may be feared.
39 Take away the disgrace I dread,
for your laws are good.
40 How I long for your precepts!
In your righteousness preserve my life.

**Miss. Abigail David**

*******************

# தேவ மகிமை

**கேதுரு மரத்தை வேதம் மகிமையான கேதுரு என்று அழைக்கிறது. (எசே.17:23).**

நம்முடைய தேவன் மகிமையின் தேவன். பிதாவாகிய தேவனைக் குறித்து. அவர் "மகிமையின் ராஜா" என்று வேதம் அழைக்கிறது. (சங். 24:7). குமாரனாகிய தேவனும் பிதாவின் மகிமைக்கு ஒப்பானவர். (எபி. 1:3). பரிசுத்த ஆவியானவரை வேதம் மகிமையுள்ள ஆவியானவர் என்று

அழைக்கிறது. (1 பேதுரு 4:14). நம்முடைய உள்ளான மனுஷர் மகிமையின் மேல் மகிமையடைந்து கிறிஸ்துவின் ஒப்பாய் மேன்மையான நிலமையிலே வளரும்படி நமக்கு கர்த்தர் உதவி செய்கிறார்.

இன்று நம்முடைய வாழ்கையின் நோக்கம் என்ன? நாமெல் லாரும் திறந்த முகமாய்க் காத்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையிலே மகிமையடைந்து மறுரூபப்படுத்துகிறோம். (2 கொரி. 3:18).

பழைய ஏற்ப்பாட்டு பரிசுத்தவானாகிய மோசே காத்தருடைய மகிமைக்காக வாஞ்சித்தார். சீனாய் மலையிலே அவர் நாற்பது நாள் ஏறி தேவ சமூகத்தில் காத்திருந்தபோது, அவருடைய முகமும் கூட தேவ மகிமையில் நிரம்பி பிரகாசித்தது. அவர் அந்த சீனாய் மலையிலிருந்து கீழே இறங்கி வந்த போது மோசேயின் மகிமை நிறைந்த முகத்தை காண முடியாத அழவிற்க்கு அவர்களின் கண்கள் கூசினது. எனவே ஜனங்களின் கண்களை பாதுகாக்கவே மோசே முக்காடிட்டு கொண்டார்.

மோசே நாற்ப்பது நாட்கள் தேவ சமூகத்தில் இருக்கும் போதே தேவனுடைய மகிமை அவரில் அவ்வளவு இறங்கியிருக்கும் என்றால், நாம் தேவனுடைய சமூகத்தில் என்றைன்றும் நிலைத்திருக்கும் போது எவ்வளவு மகிமை பொருந்தியவர்களாக இருப்போம். ஆகவே தேவ மகிமை நமக்கு வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாக நம்மை கனப்படுத்துகிறார்.

நெல்சன் சோபித ராஜ்.

# Chaps of mission



**Lottie Moon**

**"SURELY THERE CAN BE NO GREATER JOY THAN THAT OF SAVING SOULS"**

**Name** **:** Charlotte Digges Lottie moon

**Parents** **:** Anna Maria Barclay and Edward Harris Moon

**Period** **:** 12th Dec 1840 to 24th Dec 1912

**Education:** Baptist-affiliated Virginia Female Seminary and Albemarle Female Institute in Charlottesville, Virginia.

**Award** **:** Master of Arts degree

**Career & achievements:**

Lottie started her missionary work from the age of 32 in China. She waged a slow but relentless campaign to give women missionaries the freedom to

minister and have an equal voice in mission proceedings. She was a prolific writer. She encouraged Southern Baptist women to organize mission societies in the local churches.

Many of her letters appeared as articles in publication. Throughout her missionary career Moon faced plague, famine, revolution, and war. Lottie Moon has come to personify the missionary spirit for Southern Baptists and many other Christians as well.

-Joshika varshni

## பழைய மனுஷரிடமிருந்து கடிதம்

பழைய மனிதன் பேசலானான், நான் தான் உன்னுடைய பழைய உருவம், எத்தனை அழகாக நீ இந்த உலகத்தில் இருந்தார் அதுமட்டுமல்லாமல் விதவிதமான நண்பர்கள் எப்பொழுதும் உன்னை சூழ்ந்து கொண்டே இருப்பார்களே. எத்தனை விதமான சந்தோஷங்கள் உனக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்ததே.

அதுமட்டுமா எத்தனை நிகழ்ச்சிகளில் நீ சந்தோஷமாக மது அருந்தி விட்டு நடனம் பண்ணிருக்கிறாய். அந்த நடனத்தைப் பார்த்த எத்தனை பேர் உன்னை புகழ்ந்து பேசினார்கள். இப்பொழுதோ நீ தனிமையில் உட்கார்ந்து கொண்டு எதாவது எழுதுவதும், வேதம் வாசிப்பதும் அதுமட்டுமல்லாமல் ஜெபம் செய்கிறதுமாய் இருக்கிறாயா?

இது தேவைதானா இதனால் உனக்கு என்ன சந்தோஷம் இந்த உலகத்தில் கிடைத்தது.

உன்னோடு கூட இருந்தவர்களைப் பார், எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள். எத்தனை விதமான படங்களை நாம் கண்டு களித்தோம், அத்துடன் விட்டோமா. மேலும் பலவிதமான பொழுதுபோக்குகளை நாம் தேடிச் சென்றது ஞாபம் இல்லையா நண்பா? கொஞ்சம் வெளியே வா. இந்த உலகத்தில் உள்ள எல்லா காரியங்களும் நாம் அனுபவிக்கிறதற்கே படைக்கப்பட்டுள்ளது என்பதை ஏன் மறந்து போகிறாய்? இப்பொழுது நீ இவைகளை அனுபவிக்க தவறுவாய் ஆனால் பின்பு வயதான பிறகு இதைக் குறித்து மிகவும் கவலைப் பட வேண்டிய சூழ்நிலை வரும் என்பதை உனக்கு மறுபடியும் ஞாபகப் படுத்துகிறேன். நண்பா இவ்வளவு நாட்கள் நீ பேதையாய் இருந்தது போதும், இப்பொழுது ஒன்றும் குறைந்து விடவில்லை, எனக்கு சிறிது இடம் கொடு நான் உன்னோடு வந்து சேர்ந்துக் கொள்கிறேன். உன்னுடைய பதிலுக்காக காத்திருக்கும் உன் பழைய நண்பன்.

அடுத்ததாக, புதிய மனிதன் கொடுக்கும் பதில் கடிதம்:

நண்பா நான் உன்னோடு சேர்ந்து வாழ எனக்கு ஆசை உண்டு அது இப்பொழுது என்னால் முடியாது ஏனென்றால், என்னுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய விலையுயர்ந்த இரத்தத்தினால் என் பழைய மனிதனை வாங்கி சிலுவையில் ஆணியடித்து விட்டார். ஆகவே நான் நரகம் செல்ல தாயாராக இல்லை என்னை விட்டு விட்டு. தேவன் அறியாமையினால் செய்த காரியத்தை காணாமல் போல் இருந்தார். இப்பொழுதோ நான் இயேசுவை அறிந்து

விட்டேன். இந்த பழைய வாழ்க்கையை என்னால் தொடர முடியாது. அப்.பவுல் சொன்னது போல்,

நான் இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன் ஆனாலும் நான் அல்ல இயேசுவே எனக்குள் பிழைத்திருக்கிறார் - கலா 2:20

பழைய மனிதரிடம் இருந்து உங்களுக்கு கடிதம் வருகிறதா மிகவும் ஜாக்கிரைதையாய் இருங்கள்.

*M.Nesamony*

# CHILDREN'S PLACE

## CHILDRENS' QUIZ FOR THE MONTH

THE GOSPEL ACCORDING TO John (1 to 5)

**1) According the gospel of John, how can we get right to become** children of God?
a) By receiving true light (1:12)
b) By doing good and right always
c) By praying and bible reading
d) By loving your parents

**2) Who is John?**
a) Elijah
b) Prophet
c) Person who "Makes straight the way of the Lord"(1:23)
d) Who baptizes with Holy spirit

**3) Who testified Jesus as "Son of God"?**
a) Nathanael
b) John the Baptist
c) (a) & (b)1:34 & 1:49
d) None of the above

**4) Why Jesus performed His first sign at the wedding in Cana of Galilee?**
a) His friends requested Him
b) Master of feast asked him to help
c) Bridegroom told him
d) Jesus obeyed His mother's request.(2:3&4)

**5) How many years it took to build the temple of Jerusalem?**
a) 46 Years(2:20)
b) 64 Years
c) 3 Days
d) 3 Years

**6) How to have everlasting life?**
a) By seeing the serpent in the wilderness.
b) By believing Jesus, only begotten Son of God(3:16)
c) By obeying & following John the Baptist
d) By forgiving others' mistakes against us

**7) What is the equivalent of food to Jesus**
a) Bread
b) Fish
c) Living water
d) Doing God's will & to finish His work(4:34)

**8) What was the second sign of Jesus at Galilee?**
a) Curing son of a Noble Man(4:54)
b) Turning water into wine
c) Curing a person who had 38 years of infirmity
d) By telling the past life to the woman of Samaria.

**9) Why did Jews wanted to kill Jesus?**
a) He broke Sabbath by curing a person who had 38 years of infirmity
b) Jesus said "God was His father".
c) (a) & (b)(5:18)
d) None of the above

**10) Who is having authority to execute judgment?**
a) John the Baptist
b) Jesus Christ- The son of Man(5:27)
c) Moses
d) Nathanael

## March Answers:

*1. c) God and Money.*
*2. d) To dip Lazarus finger in water and cool his tongue.*
*3. d) All of the above*
*4. c) Within you.*
*5. d) Because he who humbles himself will be exalted*
*6. b) One should receive the kingdom of God like a little child*
*7. a) He came down at once and welcomed him gladly.*
*8. b) House of prayer.*
*9. a) Give to Caesar what is Caesar's and to God what isGod's.*
*10. d) Some of the Sadducees.*


***Children who answered correctly:***

1. *Easterine Benedicta Raj*
2. *Earline Bernice Raj*
3. *Roshan Ravindra*
4. *Jesvin Selvakumar*

5. Jonathan Asher
6. Jeremiah Alan
7. Jemima Ashni
8. Annlin Sophia Nelson
9. Angelin Sophia Nelson
10. Shelbino Paul
11. Johan Sanjo
12. Dennis Roger
13. Diniya Sunshine
14. Geovin George Rose
15. Gain George Rose
16. Joshika Varshni
17. Joshuva

**Names missed in April issue**
**Joshika Varshni & Joshua**

**Congrats you have done a wonderful job !!**




Praise the LORD. Give thanks to the LORD, for he is good; his love endures forever.
— Psalm 106:1 NIV

## Children show your talent



# வேத வினா விடைப் போட்டி – மே 2018

(நீதிமொழிகள் 16 முதல் 31 முடிய)

1. யாருடைய ஜெபம் அருவருப்பானது?
2. கலகத்தை தேடும் து‘ டனுக்கு கிடைக்கும் பலன் என்ன?
3. நீதிமானுக்குச் சந்தோ‘ம் யாது?
4. வெள்ளிப் பூச்சு பூசிய ஓடு எதைப் போலிருக்கும்.?
5. எலும்புக்கு மருந்து என்ன?
6. தரித்திரம் வருவது எப்போது?
7. குணசாலியான ஸ்திரீயினுடைய கணவனுக்கு கிடைக்கும் பலன் என்ன?
8. துஷ்டன் என்னப்படுவது யார்?
9. பெற்றோரை கனம் பண்ணாதவர்களுக்கு கிடைக்கும் தண்டனை என்ன?
10. தீமை யார் பக்கம் செல்லாது?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**சென்ற மாதத்திற்கான விடைகள்:**

1. நீதி 13:10 – அகந்தை
2. நீதி 2: 6 – கர்த்தர்
3. நீதி 16:27 – மரணக்கண்ணிகளுக்கு

4. நீதி 4:5,6 – விவேகி
5. நீதி 10:19 – புத்திமான்
6. நீதி 7: 5 – சகோதரி, இனத்தாள்
7. நீதி 11:30 – ஜீவவிருட்சம்
8. நீதி 6: 6 – எறும்பு
9. நீதி 12: 4 – இலச்சை உண்டுபண்டணுகிற ஸ்திரீ
10. நீதி 15: 4 – ஆரோக்கியமுள்ள நாவு

**கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

1. திருமதி. ஜெயின் ராஜவேல்
2. திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
3. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
4. திருமதி. ராதிகா செல்வகுமார்
5. திருமதி. ஷகிலா கிரேஷ் ஜஸ்டின்
6. திருமதி. ஜமுனா ராஜன்
7. திருமதி. அனிதா சுரேஷ்
8. திருமதி. ஜெயந்தா ஜாண்
9. திருமதி. பிப்லின் நெல்சன்
10. திருமதி. எபென் A. பிரசாத்
11. திருமதி. அனிதா ஜார்ஜ்
12. திரு . ஜார்ஜ் ரோஸ்

*Congregation Project (Febrary):*

# இராபர்ட் மோரிசன்

## ( Robert Morrison 1782 - 1834 )



**சுவிசேஷத்தில் ஆர்வம்**

சுவிசேஷத்தை வெளிப்படையாக பிரசங்கிக்க கூடாது என்ற தடை கேன்டனில் இருந்தபோதும் மோரிசன் தனது நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. இரண்டு ரோமன் கத்தோலிக்க நண்பர்களை கண்டு பிடித்து அவர்களிடம் சீன மொழியை கற்றுக்கொள்ள சென்ற போது, உமக்கு எங்கள் மொழியை சொல்லித் தருவதால் எங்கள் உயிருக்கு ஆபத்து உண்டு. அதிகாரிகள் எங்களை கைது செய்து கொடுமைக்கு ஆளாக்குவதற்கு முன் நாங்களே எங்களை மாய்த்துக் கொள்ள எப்போதும் விஷம் வைத்துள்ளோம் என்றனர்.

இவர்களிடம் ஜெபத்துடன் மொழியைக்கற்றுக் கொண்டு முதலில் சீன அகராதியை உண்டு பண்ணி ரகசியமாக வேதத்தையும் மொழி பெயர்க்கலானார். கேன்டன் வந்து 18 மாதத்தில் சீன மொழியில் அகராதியை ஏற்படுத்தி கொடுத்த மோரிசனை கிழக்கிந்திய கம்பெனியார் பாராட்டி அவருக்கு மொழி பெயர்பாளர் என்ற பதவியைத் தந்து மாத வருமானம் தரவும் முன் வந்தனர்.

**குடும்ப வாழ்வு**

சீன தேசத்தில் வாழ்ந்து வந்த இங்கிலாந்து மருத்துவரின் மகளான மேரி மார்டேன் ( Mary Martain )

என்பவரை திருமணம் புரிந்தார். 1815 ஆம் ஆண்டு தனது இரண்டு சிறு குழந்தைகளுடன் மேரி இங்கிலாந்து போக நேர்ந்தது. வேதனையுடன் அவர்களுக்கு பிரியா விடை கொடுத்தனுப்பிய மோரிசன் தன்னுடைய முழு நேரத்தையும் ஊழியத்தில் செலவிட்டார். 1821 ஆம் ஆண்டு சீனா வந்த போதிலும் சிறிது நாட்களிலேயே மேரி சுகவீனமடைந்து மரித்துப் போனார். ஒன்பது வயது மகள் ரெபேக்காவும் ஏழு வயது மகன் ஜானும் மறுபடியும் இங்கிலாந்து தேசத்திற்கு கல்விக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். குடும்ப வாழ்வில் பல கஷ்டங்களையும் மன வேதனையையும் அனுபவித்த மோரிசன் பிள்ளைகள் போன பிறகு தனிமையில் வேதத்தை மொழி பெயர்ப்பதில் முழு கவனத்தையும் செலுத்தினார்.

சுவிசேஷத்திற்கு சீனாவில் முதல் மிஷனெரியாக அவர் கருதப்பட்டாலும் பகிரங்கமாக சுவிசேஷம் சொல்ல முடியவில்லை. ஊழியத்தில் முதல் விசுவாசி ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு ஏழாவது வருடமே கிடைத்தார். ஆங்கிலேய அதிகாரிகள் கவனத்தில் இல்லாத பகுதியில் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

**ஊழிய பாதை அவரது மரணம்**

1815 ஆம் ஆண்டு சீன மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து வெளியிட்ட போது கிழக்கிந்திய கம்பெனியர் மோரிசனை வேலை நீக்கம் செய்தனர். கிழக்கிந்திய கம்பெனியின் அச்சுறுத்தலும் சீனாவில் இருந்த ஒரு சில கிறிஸ்தவர்களின் எதிர்ப்பும் இவரது ஊழியத்திற்கு அதிக தடையாக இருந்தது. 25 ஆண்டுகள் அயராது பாடுபட்டு 1824 ஆம் ஆண்டு வேதத்தை முழுவதும் சீன மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

இங்கிலாந்து தேசத்திற்கு விடுமுறைக்குச் சென்று இரண்டு வருடம் அங்குள்ள பல பகுதிகளில் சீன தேசத்தின் தேவையை பகிர்ந்து கொண்டு, அதன் மூலம் மிஷனெரியாக வர முன்வந்தவர்கட்கு சீன மொழியை கற்றுக் கொடுத்தார். சீனப்பெண்கள் மத்தியில் கிறிஸ்து அறிவிக்கப் படவேண்டிய அவசியத்தை எடுத்து கூறி தனது வீட்டிலே ஊழிய வாஞ்சையுள்ள பெண்களுக்குச் சிறப்பு வகுப்புகளை நடத்தினார். அனேகர் அந்த வகுப்பில் பயின்று சீனா வந்து கேன்டன பகுதியில் பணி செய்தனர். கம்பெனி வேலை, ஊழியம் என்று அதிக வேலைப் பழுவினால் பெலன் இழந்து சுகவீனப்பட்டு குனாங்ஷ் ( Gunangzhou ) என்ற இடத்தில் 1834 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தியதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். சிலரை மட்டுமே கிறிஸ்துவுக்குள் வழி நடத்த முடிந்த போதிலும் வேதத்தை சீன மொழியில் மொழிபெயர்த்தது காலத்தால் அழியாத பணியாக அமைந்தது.

*M.Nesamony*



## *BIBLE WRITERS:*

**Genesis: Moses**
**Exodus: Moses**
**Leviticus: Moses**
**Numbers: Moses**
**Deuteronomy: Moses**
**Joshua: Joshua**
**Judges: Samuel**
**Ruth: Samuel**
**1 Samuel: Samuel, Gad, Nathan**
**2 Samuel: Gad, Nathan**
**1 Kings: Jeremiah**
**2 Kings: Jeremiah**
**1 Chronicles: Ezra**
**2 Chronicles: Ezra**
**Ezra: Ezra**
**Nehemiah: Nehemiah**
**Esther: Mordecai**
**Job: Moses**
**Psalms: David and others**
**Proverbs: Solomon, Agur, Lemuel**
**Ecclesiastes: Solomon**
**Song of Solomon: Solomon**
**Isaiah: Isaiah**
**Jeremiah: Jeremiah**
**Lamentations: Jeremiah**
**Ezekiel: Ezekiel**
**Daniel: Daniel**
**Hosea: Hosea**
**Joel: Joel**
**Amos: Amos**
**Obadiah: Obadiah**

**Jonah: Jonah**
**Micah: Micah**
**Nahum: Nahum**
**Habakkuk: Habakkuk**
**Zephaniah: Zephaniah**
**Haggai: Haggai**
**Zechariah: Zechariah**
**Malachi: Malachi**
**Matthew: Matthew**
**Mark: Mark**
**Luke: Luke**
**John: Apostle John**
**Acts: Luke**
**Romans: Paul**
**1 Corinthians: Paul**
**2 Corinthians: Paul**
**Galatians: Paul**
**Ephesians: Paul**
**Philippians: Paul**
**Colossians: Paul**
**1 Thessalonians: Paul**
**2 Thessalonians: Paul**
**1 Timothy: Paul**
**2 Timothy: Paul**
**Titus: Paul**
**Philemon: Paul**
**Hebrews: Paul**
**James: James (Jesus' brother)**
**1 Peter: Peter**
**2 Peter: Peter**
**1 John: Apostle John**
**2 John: Apostle John**
**3 John: Apostle John**

**Jude: Jude (Jesus' brother)**
**Revelation: Apostle John**

***BIBLE STATISTICS:***

***Amazing Bible Facts And Statistics***

**Number of books in the Bible: 66**
**Chapters: 1,189**
**Verses: 31,101**
**Words: 783,137**
**Letters: 3,566,480**
**Number of promises given in the Bible: 1,260**
**Commands: 6,468**
**Predictions: over 8,000**
**Fulfilled prophecy: 3,268 verses**
**Unfulfilled prophecy: 3,140**
**Number of questions: 3,294**
**Longest name: Mahershalalhashbaz (Isaiah 8:1)**
**Longest verse: Esther 8:9 (78 words)**
**Shortest verse: John 11:35 (2 words: "Jesus wept").**
**Middle books: Micah and Nahum**
**Middle chapter: Psalm 117**


**Shortest chapter (by number of words): Psalm 117 (by number of words)**
**Longest book: Psalms (150 chapters)**
**Shortest book (by number of words): 3 John**
**Longest chapter: Psalm 119 (176 verses)**
**Number of times the word "God" appears: 3,358**
**Number of times the word "Lord" appears: 7,736**
**Number of different authors: 40**
**Number of languages the Bible has been translated into: over 1,200**

To be continued....

*Mrs. Ceciliya Rajkumar*

# WEDDING ANNIVERSARY –May 2018

| | | | |
|---|---|---|---|
| 1 | 4-5-18 | Mr.Lawrence<br>Mrs.Augusta | 056 641 1676 |
| 2 | 6-5-18 | Mr.Prabu William Carry<br>Mrs.Irish Shanthini | 050 576 6697 |
| 3 | 6-5-18 | Mr.Aruldhas<br>Mrs.Prasanna | 055 676 3719 |
| 4 | 11-5-18 | D.Shino P.Mathew<br>Dr.Shelly Kurian | 056 1932532 |
| 5 | 12-5-18 | Mr.T. Selva Kumar<br>Mrs.Radhika Grace | 050 233 4421 |
| 6 | 13-5-18 | Mr.John Joseph<br>Mrs.Jessie Beulah | 050 245 5266 |
| 7 | 25-5-18 | Mr.David Sworna Balan<br>Mrs.Yesubai | 055 640 0635 |
| 8 | 26-5-18 | Y.Mesiah Dhas<br>Mrs.Suja Jasmine | 050 543 1241 |



# BIRTHDAY CELEBERANTS - May 2018

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 -5- 18 | Master.G.A.Gain | 055 484 5125 |
| 2 | 5 - 5 - 18 | Mrs.Lavanya Kannan | 050 4821006 |
| 3 | 10 -5-18 | Mrs.Beulah Rani David | 050 543 2630 |
| 4 | 13 -5-15 | Mr.Silvistor Solomon | 505 931 8750 |
| 5 | 15 -5-18 | Mr.George Rose | 055 484 5125 |
| 6 | 16 -5-18 | Mr.T.Selvakumar | 050 233 4421 |
| 7 | 16 -5-18 | Mrs.Nirmala Jenifer Paul | 054 405 3895 |
| 8 | 16 -5-18 | Mr.A.Selvakumar | 050 838 6851 |
| 9 | 18 -5-18 | Mr.R.Aruldhas | 055 676 3719 |
| 10 | 19 -5-18 | Mrs.Salini Vimala | 050 924 9930 |
| 11 | 20 -5-18 | Mr.Prabu William Carry | 050 573 6697 |
| 12 | 23 -5-18 | Mr.C.Hevin Heba | 055 374 0685 |
| 13 | 25 = 5-18 | Dr.Shino P. Mathew | 056 1932532 |
| 14 | 26 -5-18 | Baby.J.H. Juana | 055 249 8186 |
| 15 | 28 -5-18 | Mr.Suresh rajan | 050 586 8173 |



# Worship Timings

## Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

## REGULAR MINISTRIES @ PERSONAGE – Jahli

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Saturdays | 07.00 PM | Gospel Ministry |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |
| Last day of Every Month | 11.30 PM | Month End & Beginning Prayer |

# DAILY BIBLE READING May – 2018

"Your word is a lamp to my feet and light for my path path" Ps.119:105

| | | | |
|---|---|---|---|
| 1 | TUE | Psalm 44 | Numbers 8 |
| 2 | WED | Psalm 45 | Numbers 9 |
| 3 | THU | Psalm 46 -47 | Numbers 10 |
| 4 | FRI | Psalm 48 | Numbers 11 |
| 5 | SAT | Psalm 49 | Numbers 12 - 13 |
| 6 | SUN | Psalm 50 | Numbers 14 |
| 7 | MON | Psalm 51 | Numbers 15 |
| 8 | TUE | Psalm 52 - 54 | Numbers 16 |
| 9 | WED | Psalm 55 | Numbers 17 - 18 |
| 10 | THU | Psalm 56 - 57 | Numbers 19 |
| 11 | FRI | Psalm 58 - 59 | Numbers 20 |
| 12 | SAT | Psalm 60 - 61 | Numbers 21 |
| 13 | SUN | Psalm 62 - 63 | Numbers 22 |
| 14 | MON | Psalm 64 - 65 | Numbers 23 |
| 15 | TUE | Psalm 66 - 67 | Numbers 24 |
| 16 | WED | Psalm 68 | Numbers 25 |
| 17 | THU | Psalm 69 | Numbers 26 |
| 18 | FRI | Psalm 70 - 71 | Numbers 27 |
| 19 | SAT | Psalm 72 | Numbers 28 |
| 20 | SUN | Psalm 73 | Numbers 29 |
| 21 | MON | Psalm 74 | Numbers 30 |
| 22 | TUE | Psalm 75 - 76 | Numbers 31 |
| 23 | WED | Psalm 77 | Numbers 32 |
| 24 | THU | Psalm 78 ; 1 - 37 | Numbers 33 |
| 25 | FRI | Psalm 78 ; 38 - 72 | Numbers 34 |
| 26 | SAT | Psalm 79 | Numbers 35 |
| 27 | SUN | Psalm 80 | Numbers 36 |
| 28 | MON | Psalm 81 - 82 | Dueteronomy 1 |
| 29 | TUE | Psalm 83 - 84 | Dueteronomy 2 |
| 30 | WED | Psalm 85 | Dueteronomy 3 |
| 31 | THU | Psalm 86 - 87 | Dueteronomy 4 |